# தமிழ்நாட்டில் விளையாட்டு வீரர்களுக்கு எல்லா வகையிலும் உதவிட திராவிட மாடல் அரசு தயாராக உள்ளது!

## 1021 வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகைகள் வழங்கி – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை,ஜன.9-

**சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் புதிய உள் விளையாட்டு அரங்கத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், 127 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் ஒலிம்பிக் அகாடமிகள், பாரா விளையாட்டு அரங்கங்கள் கட்டும் பணிகளுக்கான அடிக்கல்லை நாட்டினார்.**

விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், சர்வதேச ஆசிய மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 1,021 வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகைகளுக்கான காசோலைகளை வழங்கினார்

இதனைத் தொடர்ந்து அவர் ஆற்றிய எழுச்சி உரையின் விவரம் வருமாறு:

முதலில் உங்கள் அத்தனைப்பேருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

### 26 கோடியே 69 லட்சம் ரூபாய்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற ஆயிரத்து 21 வீரர், வீராங்கனைகளுக்கு 26 கோடியே 69 லட்சம் ரூபாய் அளவிற்கு இன்றைக்கு உயரிய ஊக்கத்தொகையை வழங்குவதில், நாங்கள் மிகுந்த பெருமை அடைகிறோம். மகிழ்ச்சி அடைகிறோம்.

### ஒலிம்பிக் நீர் விளையாட்டு

மேலும், மொத்தம் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில், `மாவட்ட விளையாட்டு வளாகம்' அமைக்கவும், ரூபாய் 43 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமி ஏற்படுத்தவும், ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில், திருச்சி இலந்தைப்பட்டியில் ஒலிம்பிக் அகாடமி அமைக்க இன்றைக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறோம்.

அதேபோல் மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாரா விளையாட்டு அரங்கம் அமைக்கவும் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும், திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய உள் விளையாட்டு அரங்கினையும் இன்றைக்கு உங்கள் முன்பு திறந்து வைத்து இருக்கிறோம்.

இன்றைக்கு, இந்த நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் அதிகமான விளையாட்டுத்துறைச் சாதனையாளர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையும் வழங்கப்படுவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### அர்ஜுனா விருது

குறிப்பாக, இங்கு அர்ஜுனா விருதுக்கு தேர்வாகியுள்ள பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற தங்கை துளசிமதி முருகேசன் அவர்கள் வந்து இருக்கிறார்கள். அதேபோல், டேபிள் டென்னிஸ் விளையாட்டில் சர்வதேச மற்றும் தேசிய அளவில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்ற தம்பி சத்யன் அவர்களும் இங்கே வருகை தந்து இருக்கிறார். அவரும் அர்ஜுனா விருது பெற்றவர். இவர்களைப் போல இங்கு ஏராளமான ஒலிம்பியன்ஸ், சர்வதேச அளவிலான வீரர்கள் வந்து இருக்கிறீர்கள். சாதாரணமான ஒரு பின்புலத்தில் இருந்து புறப்பட்டு, இன்றைக்கு ஒட்டுமொத்த உலகே திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்ற உங்கள் அத்தனைப் பேருக்கும் எங்களின் பாராட்டுகள், வாழ்த்துகள்.








துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் ரூ.127.90 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள், ஒலிம்பிக் அகாடமிகள், பாரா விளையாட்டு அரங்கங்கள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் ரூ. 4.93 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய உள் விளையாட்டரங்கத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம் (இராமநாதபுரம்), அ.நல்லதம்பி (திருப்பத்தூர்), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அர்ஜுனா விருது பெற்ற டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீரர் ஞா.சத்யன், அர்ஜுனா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பராலிம்பிக்ஸ் பதக்க வீராங்கனை செல்வி. துளசிமதி முருகேசன் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விடுதி மாணவர்கள்

என் மனதுக்கு எப்போதும் நெருக்கமான எஸ்.டி.ஏ.டி விடுதி மாணவர்கள் வந்து இருக்கிறீர்கள். உங்களுக்கு இவர்கள் இரண்டு பேரும் ஒரு உத்வேகமாக நிச்சயமாக இருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். உங்களுக்கும் பாராட்டுகள், வாழ்த்துகள்.

உங்கள் எல்லோருக்கும் தெரியும். கொஞ்ச காலத்திற்கு முன்பு வரைக்கும் குறிப்பிட்ட சில விளையாட்டு வீரர்களைத் தவிர பல விளையாட்டு வீரர்கள் வறுமையில் வாடுகிறாகள், வறுமையில் இருக்கிறார்கள் என்று பொதுவாக சொல்வார்கள். ஆனால், நம் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு அந்த நிலை முற்றிலும் மாறியுள்ளது.

கழக அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு இதுவரை பல்வேறு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 4 ஆயிரத்து 352 வீரர்களுக்கு ரூபாய் 143 கோடியே 85 லட்சம் அளவிற்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறைக்கு அமைச்சராக பொறுப்பேற்றவுடன் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களின் துறைக்கு ஒரு கட்டளையைப் பிறப்பித்தார்.

### எங்களுக்கு அறிவுறுத்தினார்

விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைக்கின்ற வீரர்கள் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன என்ற அந்த செய்தி இனி மேல் வரவே கூடாது என்று ஒரு கட்டளையிட்டார். அதன்படி செயல்பட வேண்டும் என்று எங்களுக்கு அறிவுறுத்தினார். கழக அரசு அந்த உறுதியோடுதான் நம் துறை செயல்பட்டு வருகிறது. அதற்கு ஒரு சிறிய உதாரணம் தான் இன்றைக்கு இவ்வளவு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சி.

### 113 பதக்கங்கள் 594 வீரர்கள்

பொருளாதாரத்தை விட உங்களின் திறமையே பெரிது. ஆகவேதான், பொருளாதாரம் உங்களின் திறமைக்கு ஒரு தடையாக இருக்கக்கூடாது என்றுதான் முதன்முறையாக தமிழ்நாடு சாம்பியன் பவுண்டேசன் என்ற திட்டத்தை நாங்கள் செயல்படுத்தினோம்.

அந்த திட்டத்தின் மூலம் 113 பதக்கங்களை வென்ற 594 வீரர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன் பவுண்டேசன் மூலம் 11 கோடியே 38 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் அளவில் நிதியுதவி வழங்கி இருக்கிறோம்.

சர்வதேச அளவில் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க எந்த ஒரு விளையாட்டு வீரருக்கும் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதில் நம் திராவிட மாடல் அரசு தெளிவாக இருக்கிறது. அந்த அளவிற்கு விளையாட்டுத் துறையை முன்னெடுத்துச் செல்ல தமிழ்நாடு அரசு எல்லாவித முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

### பணி நியமன ஆணைகள்

சமீபத்தில்கூட, இங்கு குறிப்பிட்டது போல் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குகின்ற வீரர்களுக்கு தமிழ்நாடு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் பணி வாய்ப்பினை வழங்கும் விதமாக நம் முதலமைச்சர் அவர்கள் வரலாற்றிலேயே முதன்முறையாக ஒரே நேரத்தில், 84 வீரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி சிறப்பித்தார்.

ஆகவே, இன்றைக்கு உங்களுக்கு உயரிய ஊக்கத்தொகையும் வழங்குகிறோம். வேலைக்காக விண்ணப்பித்து இருந்தால், அதன்மீது பரிசீலனைச் செய்து நம் அரசு வீரர்களுக்கு வேலையையும் நிச்சயம் தரும் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் இருந்து உருவாக வேண்டும் என்பதுதான் இந்த அரசின் ஒரே நோக்கம். விளையாட்டு எவ்வளவு சக்தி வாய்ந்தது, மரியாதைக்குரியது என்பதற்கு இங்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### கால்பந்தாட்ட வீரர் பீலே

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு 1975 ஆம் ஆண்டு காலகட்டத்தில் உலகின் மிகச்சிறந்த, பிரபலமான கால்பந்தாட்ட வீரர் பீலே அவர்கள் அப்போதைய அமெரிக்க பிரசிடெண்ட் ஜெரால்டு போர்டு பீலே அவர்களை சிறப்பு விருந்தினராக, அவரை கௌரவப்படுத்துவதற்காக, வெள்ளை மாளிகைக்கு அழைத்து சிறப்பு செய்கிறார். அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

திரு போர்டும், பீலேவும் பேசிக்கொண்டு இருக்கும்போது அங்கு இருக்கின்ற ஒரு சிறுவன் ஒரு ஆட்டோகிராப் புக்கை எடுத்துக் கொண்டு அவர்களை நோக்கி வேகமாக ஓடி வருகிறான். அவன் தன் ஆட்டோகிராப் புத்தகத்தை அமெரிக்க அதிபர் போர்டிடம் நீட்டுவான் என்று அங்கு இருந்த அத்தனைப்பேரும் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

### ஆட்டோகிராப் புக்

ஆனால் அவர் அந்த ஆட்டோகிராப் புக்கை பீலே அவர்களிடம் சென்று நீட்டினான். இதைப்பார்த்த அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். வல்லரசு நாடான அமெரிக்க அதிபரின் ஆட்டோகிராபை விட பிரேசிலில் வறுமையான குடும்பத்தில் பிறந்து, ஒரு ஃபுட்பால் வாங்கக்கூட காசு இல்லாத நிலையில் விளையாடத் தொடங்கி ஃபுட்பால் என்றாலே பீலே என்று சொல்லும் அளவுக்கு உயர்ந்த பீலேவின் கையெழுத்துதான் சிறுவனுக்குப் பெரியதாக தெரிந்தது. அதுதான் விளையாட்டு வீரர்களுக்கு கிடைக்கின்ற சிறப்பு, உங்களுக்கு கிடைக்கின்ற அந்த புகழ். அந்த மாதிரியான சிறப்பை தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் பெற வேண்டும் என்று நாங்கள் முயற்சிக்கிறோம். அந்த இலட்சியத்தை நோக்கி நீங்கள் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### தமிழ்நாட்டு திறமையாளர்கள்

விளையாட்டைப் பொறுத்தவரை உங்களுக்கு எல்லா வகையிலும் உதவ நம் முதலமைச்சர் அவர்களும், நம் திராவிட மாடல் அரசும் என்றென்றும் தயாராக இருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டியது இரண்டே விஷயம்தான். ஒன்று உங்களின் திறமையை வளர்த்துக்கொள்வது. இரண்டு உங்களுக்கு என்னென்ன உதவிகள் தேவை என்பதை நம் அரசுக்குத் தெரியப்படுத்துவது. முதலாவது உங்களின் கைகளில் இருப்பது. இரண்டாவது எங்களின் கைகளில் இருப்பது.

இந்த உலகத்தில் எந்த மூலையில் விளையாட்டுப் போட்டிகள் நடந்தாலும் தமிழ்நாட்டு திறமையாளர்களை அதில் கலந்துகொள்ள வைப்பது எங்கள் கடமை என்பதை மட்டும் உங்களுக்கு இந்த நேரத்தில் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

இங்கு தங்கை துளசிமதி முருகேசன் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார். படிப்பு எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு விளையாட்டும் முக்கியம். நன்றாக படிக்கின்ற பிள்ளை நன்றாக விளையாடும். நன்றாக விளையாடுகிற பிள்ளை நன்றாக படிக்கும் என்று. அதற்காகத்தான் நம் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களை கையோடு கூட்டி வந்துள்ளேன். ஏனென்றால், அவர் நினைத்தால்தான் மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் விளையாட முடியும். எனவே, இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உயரிய ஊக்கத் தொகை பெற்றுள்ள அத்தனை வீரர்களுக்கும் மீண்டும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர் பாட்சா முத்துராமலிங்கம், நல்லதம்பி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., சர்வதேச டேபிள் டென்னிஸ் வீரர் சத்யன், பாரா ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற வீராங்கனை துளசிமதி முருகேசன், மாவட்ட வருவாய் அலுவலர் மணிகண்டன், எஸ்.டி.ஏ.டி பொது மேலாளர் சுஜாதா, வீரர்கள், வீராங்கனைகள் உள்பட அரசு அதிகாரிகள், அலுவலர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

---

அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை!

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் - ஓசூரில் பாக முகவர்கள் கூட்டம்!

மேயர் ஏ.சத்தியா வரவேற்புரை! தளி ஒய்.பிரகாஷ் தலைமை!

கிருஷ்ணகிரி, ஜன. 9-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், ஒசூர், தளி மற்றும் வேப்பனபள்ளி சட்டமன்ற தொகுதிகளின் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம், ஒசூரில் தளி சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடந்தது இக்கூட்டத்திற்கு, மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். அவைத் தலைவர் யுவராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன், சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் பொறுப்பாளர்கள் முன்னிலை வகித்தனர். ஒசூர் மாநகர செயலாளர், மேயர் எஸ்.ஏ. சத்யா வரவேற்புரை ஆற்றினார் .

இதில் மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், உணவு மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கர பாணி கலந்து கொண்டு பாக முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி கூட்டத்தில் பேசியதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இன்று தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. ஒரு காலத்தில், தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்ற அழைக்கப்பட்ட கோயமுத்தூரைக் காட்டிலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தான். இன்று தொழிற்சாலைகள் அதிகளவில் வந்து கொண்டிருக்கின்றன.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூரில், பாக முகவர்கள் கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்றுச் சிறப்புரையாற்றி பாக முகவர்களுக்கு பொங்கல் பரிசினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஓய். பிரகாஷ்,மேயர் எஸ். ஏ.சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன், அவைத்தலைவர் யுவராஜ், பொருளாளர் சுகுமாரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

கடந்த சட்டமன்ற தேர்தலில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 தொகுதிகளில் மிக குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி இழந்து விட்டோம். வரும் தேர்தலில், மேற்கில் 3, கிழக்கில் 3 என மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளிலும் 100 சதவீதம் நாம் மகத்தான வெற்றி பெறுவது உறுதி. எனவே, பாக முகவர்கள் தீவிரமாக உழைக்க வேண்டும். வருகிற 2026 சட்டமன்றத் தேர்தல், நமக்கு மிகவும் முக்கியமான தேர்தல் ஆகும். ஒசூர், தளி, வேப்பனபள்ளி ஆகிய 3 தொகுதிகளிலும் கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்கள் யாரை அறிவிக்கிறாரோ, அவரை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வது நமது பொறுப்பு மற்றும் கடமை என உணர்ந்து செயல்பட வேண்டும். ஒற்றுமையுடன் தீவிரமாக உழைக்க வேண்டும்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அடுத்த ஆண்டு மே மாதம், மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்க நாம் அனைவரும் உறுதுணையாக, ஆதரவாக இருக்க வேண்டும்.

இவ்வாறு, அமைச்சர் அர.சக்கரபாணி கூட்டத்தில் பேசினார்.

கூட்டத்தை தொடர்ந்து, பாக முகவர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார்.

இக்கூட்டத்தில் துணை மேயர் ஆனந்தய்யா, மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி, புஷ்பா சர்வேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீரா ரெட்டி, எல்லோரா மணி, கிரிஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன் , தனலட்சுமி, முனிராஜ் , அப்துல் கலாம் , ஒன்றிய செயலாளர்கள் ரகுநாத், கருணாகரன், நாகேஷ், பாக்யராஜ், சின்னராஜ், ஸ்ரீதர், சீனிவாசலு ரெட்டி, திவாகர், தணிகாசலம், தஸ்தகீர், மாநகர அவைத் தலைவர் செந்தில் குமார், தொ.மு.ச. கோபால கிருஷ்ணன், மாதேஸ்வரன், சென்னீரப்பா, ரவி, ரவிக்குமார், விஜயகுமார், சுமன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய நிர்வாகிகள், மாநகராட்சி கவுன்சிலர்கள், பாக முகவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட பொருளாளர் சுகுமாரன் நன்றி உரையாற்றினார்.

---

பூக்கடை கணேசன் தலைமை! அமைச்சர் க.பொன்முடி - பொன்.கவுதமசிகாமணி பங்கேற்பு!

## திருவெண்ணெய்நல்லூரில் பிரச்சாரக் கூட்டம்!

எழும்பூர் மோ.கோபிநாத் - வேல்முருகன் சிறப்புரை!

விழுப்புரம்,ஜன,9-

விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி திருவெண்ணெய்நல்லூர் நகர தி.மு.க. சார்பில் நவம்பர் 27 எளியோர் எழுச்சி நாள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக அரசின் சாதனை விளக்கத் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் இன்று (09.01.2025 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணிக்கு, கலைஞர் பேனா நிழற்குடை & அலுவலகம், 2. அண்ணா சிலை அருகில் திருவெண்ணெய்நல்லூரில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு பூக்கடை கணேசன் தலைமை வகிக்கிறார்.

அஞ்சுகம் கணேசன், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், க.ஜோதி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர். இக்கூட்டத்தில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி, தலைமைக் கழகப் பேச்சாளர்கள் எழும்பூர் மோ. கோபி நாத், வேல்முருகன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் ஜெயச்சந்திரன், அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., இரா. ஜனகராஜ், செ.புஷ்பராஜ், டி.என்.முருகன், டி.செல்வராஜ், தடா.இளந்திரையன், செ.தினகரன் பி.கற்பகம், சுவை சுரேஷ், இளங்கோ, தேன்மொழி, விஜயபாபு, சீறு காவிய வேந்தன், தி.மு.நாவலவன், வீர.சுரேஷ்பாபு, ர.செல்வம், கு.சரவணக்குமார் ,சு. ராஜாராம்., டி.டி.செல்வம், ஜி.கே.கார்த்திகேயன், சி.பழனி, பெ.சுரேஷ், எஸ். எஸ்.அன்பழகன், டி.கே. எஸ்.செந்தில்முருகன், அ.சையத்நாசர், காந்திமதி வெங்கடேசன், சத்துணவு மோகன், தில்லை காமராஜ் சத்திய நாராயணன், யாசர் அராபத், வெற்றிவேல், டி.சுரேஷ், ஆ.கிருபாபுரி, அய்யனார், மணிகண்டன், க.அருள், ஷாஜகான், வீர. ரமேஷ், மகேந்திரன், தண்டபாணி, டி.சி.ரமேஷ், சி.ரமேஷ், சலீமா தாஜுதீன், கு.பாபு, விருத்தாம்பாள், நாயன், ராதா அறிவழகன், பரமேஸ்வரி செல்வம், அம்சவள்ளி, ராஜேந்திரன்,ரஹமத்துன்னிஷா, ஷாஜகான், பி.ரகு, அரங்கராஜன், கமலா, கலியபெருமாள், தி.பாக்கியராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இரா.கிருஷ்ணராஜ் நன்றி கூறுகிறார்.




உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 53 – ஆவது ஆளுகைக் குழுக் கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவருமான மு.பெ.சாமிநாதன் தலைமையில் 07.01.2025 அன்று சென்னை, தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) கோபிநாத் ஸ்டாலின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.